**05.08.2025.**

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்.

**SC No.375 /2021**

அ.சா. **15**

பெயர். திரு.ஆறுமுகம்

சாட்சி மீண்டும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-</u>

ஐயப்பன் சிகிச்சையில் இருந்த போது அவரை அ.சா.1 விசாரித்த போது, திருக்கனூர் ஏரிக்கரையில் 1, 2 எதிரிகள் ஐயப்பனை இருசக்கர வாகனத்தில் அழைத்து வந்ததாகவும், இந்த விவரத்தை ஐயப்பன் அ.சா.1 க்கு சொன்னதாகவும் வாக்குமூலத்தில் இல்லை என்று சொன்னால், சரிதான். 1 வது எதிரி அஞ்சலாட்சி வீட்டிற்கு வெளியே ரோட்டிற்கு பக்கத்தில் டிராக்டர் நிறுத்தும் இடத்திற்கு பக்கத்திலிருந்து ஒரு கட்டில் காலை எடுத்து வந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். 3, 4 எதிரிகள் அ.சா.1 நதியாவை சிமெண்ட் தரையில் தள்ளிவிட்டு அவர் விழுந்ததாக தனது 161 வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். கோபாலகிருஷ்ணனின் வாக்குமூலத்தில் 1, 2 எதிரிகள் ஐயப்பனை இருசக்கர வாகனத்தில் அழைத்து வந்த போது, அவர் பிள்ளையார் கோயிலில் இருந்து பார்த்தது போல் எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 3,4 எதிரிகள் முனியம்மாள் வீட்டு அருகில் தாக்கியதாகவும், 2ம் எதிரி ஸ்பேனரால் ஐயப்பனின் பல்லில் தாக்கியதாகவும், எனது 161 படியான வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். முகவாய் கட்டை என்று உள்ளது. பழனி வீட்டு அருகில் 4 எதிரிகளும், பழனி வீட்டின் பின்புறம் 1,2 எதிரிகளும் ஐயப்பனை தாக்கியதாக நான் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் ஐயப்பன் மயக்கம் அடையாதவாறு எதிரிகள் தண்ணியை ஊற்றி தாக்கினார்கள் என்று எனது வாக்குமூலத்தில்

சொல்லவில்லை என்றால் சரிதான். 3 வது எதிரி தடியை எங்கிருந்து எடுத்தார் என்றும், அது எரிந்த நிலையில் இருந்தது என்றும், கோபாலகிருஷ்ணன் எனது வாக்கு மூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். கோபாலகிருஷ்ணனை எதிரிகளை திட்டியதாகவும், அவர் சாட்சி பிரகாஷை கூட்டிக் கொண்டு வந்ததாகவும் சொல்லவில்லை என்றால் சரிதான். 25/04/2021 தேதி மாலை 4.30 மணிக்கு எங்கள் காவல் நிலையத்தில் இருந்து ஒரு காவலர் சம்பவ கிராமத்திற்கு சென்றதாக கோபாலகிருஷ்ணன் நீதிமன்ற விசாரணையில் சொல்லியுள்ளாரா? என்றால் அது சம்பந்தமாக சொல்லவில்லை. ஐயப்பனுக்கும், விஜயகுமாரிக்கும், சண்டை நடந்து அது சம்பந்தமாக 2ம் எதிரிக்கும், ஐயப்பனுக்கும் வாக்குவாதம் நடந்து, அதனால் ஐயப்பன், நதியாவிற்கு பிரச்சினை ஏற்பட்டு அவர் தாயார் வீட்டிற்கு சென்ற நதியா மீண்டும் சிவபெருமான்பாளையம் என்று வந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். 1, 2 எதிரிகள் ஐயப்பனை இருசக்கர வாகனத்தில் 12-10 மணிக்கு அழைத்து வந்த போது காயம் இருந்ததாகவும், நான் விசாரித்த போது சொன்னாரா? என்றால் இல்லை. பழனி வீட்டு அருகில் 1 வது எதிரி ஐயப்பனை கட்டில் காலால் முதுகில் அடித்ததாக சொல்லியுள்ளாரா? என்றால், முதுகில் அடித்ததாக சொல்லவில்லை. 2 வது எதிரி கட்டையாலும், மூன்றாம் எதிரி சா.பொ. 3 எரிந்த நிலையில் உள்ள கட்டையாலும், ஐயப்பனின் வலது கால் முட்டியின் கீழ் அடித்ததாக சொல்லவில்லை என்றால், குறிப்பிட்டு சொல்லவில்லை. உடல் முழுவதும் தாக்கியதாக சொல்லியுள்ளேன். 4ம் எதிரி கட்டையால் ஐயப்பனின் முதுகில் அடித்ததாகவும், ஐயப்பன் மயங்காதவாறு தண்ணியை ஊற்றியதாகவும் என்னிடம் சொல்லியுள்ளாரா? என்றால் இல்லை. அ.சா.3 ராஜா 25/04/2021 தேதியில் தான் திருக்கனூர் உறவினர் வீட்டிற்கு சென்று ஏரிக்கரை வழியாக வந்தபோது, காலை 11 மணிக்கு ஐயப்பனை 1,2 எதிரிகள் ஆலமரத்தடியின் கீழ் வைத்து தாக்கியதாகவும், அதை சாட்சி ராஜா பார்த்ததாகவும், நான் விசாரித்த போது சொல்லியுள்ளாரா? என்றால், இல்லை. ராஜா என்பவரின் பூர்வீகம் பண்ருட்டி கரும்பூரை சேர்ந்தவர் என்றால், அது சம்பந்தமாக விசாரிக்கவில்லை. அ.சா.1 அவரது அத்தை என்றும், அ.சா.2 அவரது தாய் மாமன் என்றும் சொன்னால் அது குறித்து நான் விசாரணை செய்யவில்லை. அவர் கையெழுத்து செய்த பார்வை மகசரில் ஒரு சிறிய கட்டிலின் காலை மல்லிகா பாட்டி வீட்டிற்கு பக்கத்து வீட்டிற்கு பின்னால் இருந்து எடுத்ததாக சொன்னாரா? என்றால், சொல்லவில்லை. முதல் சம்பவத்தை திருக்கனூர் ஏரிக்கரையில் இருந்து 1,2 எதிரிகள் இருசக்கர வாகனத்தில் ஐயப்பனை அழைத்து வந்ததை

பார்த்ததாக சாட்சிகள் இல்லை என்று சொன்னால் சரிதான். எனது பட்டியலின் படி 26/04/2021 காலை 6:00 மணிக்கு தயார் செய்த பார்வை மகசரில் சாட்சி கையெழுத்திட்ட நபர் என்றால் சரிதான்.

(நேரமின்மை  காரணமாக குறுக்கு விசாரணை பகுதியாக நிறுத்திவைக்கப்படுகிறது)